**தலைப்பு 220 - ஆயுர்வேத திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 220 - ஆயுர்வேத திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 20 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,741.97 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,522.03 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 219.94 மில்லியன் அதாவது 12.63 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,166.97 | 1,109.02 | 57.95 | 4.97 |
| மூலதனம் | 575.00 | 413.01 | 161.99 | 28.17 |
| மொத்தம் | 1,741.97 | 1,522.03 | 219.94 | 12.63 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 22001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 36.68 | 33.36 | 27.68 | 33.71 | 190.00 | 80.34 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழ் 04 பொது வைப்புக் கணக்குகள் காணப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11.18 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0127/000 | 2.95 |
| 6000/0000/00/0016/0076/000 | 7.59 |
| 6000/0000/00/0018/0082/000 | 0.13 |
| 6000/0000/00/0019/0019/000 | 0.51 |
| மொத்தம் | 11.18 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

ஆயுர்வேத திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தால் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ஈ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (உ) | வாகன நிரற்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

திணைக்களத்தில் உரிய நிதிப்பிரமாணம் 272(2) இன் பிரகாரம் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமல் ரூபா 99,700,989 பெறுமதியான 112 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் காணமல் போயிருந்தது.

### 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 25 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும், முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட 01 கணக்காய்வு ஐயவினாவிற்கும் 2016 யூலை 25 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 501,900,434 ஆகும்.

**3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள் காரணமாக 04 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 6,800,000 மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மையின் காரணமாக 11 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 205,387,219 தொகையில் ரூபா 138,434,700 சேமிக்கப்பட்டிருந்ததுடன் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 60 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

22001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,627,020 ஆக இருந்தது. அந்த நிலுவை மீதிகள் 05 வருடம் முதல் 10 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தால் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த 3 கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 407,009 ஆக இருந்ததுடன் அதில் இரண்டு கடன் மீதிகள் தொடர்பாக போதியளவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 09 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,177,320 கூட்டுத் தொகையான கடன்களுக்குரிய இரத்துச் செய்ய முடியாத அட்டோர்னி அனுமதிப்பத்திரம் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**(அ) உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்ற அவைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வறிக்கை 2016 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் பாரளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

6.5 ஏக்கரையுடைய பின்னதுாவ மூலிகைத் தோட்டத்தில் 1 ஏக்கர் அளவான காணிப்பகுதி மீளாய்வாண்டின் போது மருந்து பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தால் அவ்வறிக்கை 2016 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

(இ) தீர்க்கப்படத பொறுப்புக்கள்

பொறுப்புப் பதிவேடொன்று பேணப்படாமையினால் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 269,553,570 தொகையான பொறுப்புக்களின் சரியான தன்மையினை பரீட்சிக்க முடியாதிருந்தது. அதில் ரூபா 23,762,018 தொகையான பொறுப்பு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் விலைப்பட்டியல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக ரூபா 155,213 தொகையான பொறுப்புக்கள் இரு தடவைகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,098,587 பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

**3.8 இணங்காமைகள்**

(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கிழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| ❖ நிதிப்பிரமாணம் 104 | மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த 04 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ❖ நிதிப்பிரமாணம் 237(அ) | ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் திருப்திகரமாக வேலை செய்யப்பட்டமைக்கு அல்லது வழங்கப்பட்டமைக்கு, சிபாரிசு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் அதற்கு இணங்கியதாக இருக்கின்றமைக்கும் சான்றிதழொன்று பெறப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அவ்வாறான சான்றிதழொன்று பெறப்படாது கூட்டுமொத்தமாக ரூபா 1,536,735 தொகையான 02 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| ❖ நிதிப்பிரமாணம் 260 | மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு உறுதிச்சீட்டில் பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தருக்குப் பதிலாக வேறொரு உத்தியோகத்தருக்கு ரூபா 15,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| ❖ நிதிப்பிரமாணம் 264(1) | 05 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலம் கூட்டு மொத்தமாக ரூபா 5,685,039 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அப்பணம் பெறப்பட்டமைக்காக பெறுனரிடமிருந்து பற்றுச்சீட்டு பெறப்பட்டிருக்கவில்லை. |
| ❖ நிதிப்பிரமாணம் 267 | திணைக்களத்தால் மீளாய்வாண்டின் 04 மாதங்களின் போது 425 உத்தியோகத்தர்களுக்கு படியாகச் செலுத்தப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 19,329,491 தொகை பெற்றமைக்கு உரிய உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. |
| ❖ நிதிப்பிரமாணம் 371 | (i) செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உபகட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 08 உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட ரூபா 243,371 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டு நிதி 30 நாட்கள் முதல் 210 நாட்கள் வரையிலான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |

(ii) உரிய செயற்பாடு சரியாக இனங்காணப்படாமல் மீளாய்வாண்டின் போது 14 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 197,259 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதி உரிய பணிகள் நிறைவேற்றப்படாமல் சில தினங்கள் கையில் வைத்திருந்ததன் பின்னர் மீளச் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

-----------------------------------------------

| | |
|---|---|
| ❖ 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2011 ஆம் ஆண்டின் பின்னர் திணைக்களத்தின் வாகனங்களின் எரியும் எரிபொருள் அளவு தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| ❖ 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 17 ஆந் திகதி வரையிலும் 05 குழாம் வாகனங்களில் அரசாங்க இலட்சனை முத்திரை பதிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

-------------------------------------------------------------------------

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.12 வழிகாட்டியில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு அல்லது வழங்குனருக்குச் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி தொடர்பான விபரம் பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்ட மாதத்தின் பின்னரான மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறவிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரருக்கும் வழங்குனருக்கும் செலுத்தப்பட்ட பெறுமதி சேர்வரியான ரூபா 31,689,300 தொகை தொடர்பான விபரம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுமதி சேர் வரிக்கான பதிவு இலக்கம் குறிப்பிடப்படாத இரண்டு பட்டியல்களுக்காக பெறுமதிசேர் வரியாக முறையே ரூபா 84,830 மற்றும் ரூபா 166,250 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.9 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட பின்வரும் பணிகள் முழுமையாகவே அல்லது பகுதியளவிலோ நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) உள்நாட்டு மூலிகைப் பயிர்ச் செய்கையை மேம்படுத்தும் நோக்கில் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,000,000 தொகையான நாற்றுக்கள் விற்பனைச் சாலையொன்று நிர்மாணித்தல்.

(ii) முறையானதாகவும், வினைத்திறனானதாகவும் கட்டியெழுப்பும் நோக்கில் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 500,000 தொகையான ஆவணக் காப்பகத்தில் இராக்கைகளைப் பொருத்துதல்.

(iii) ஊழியர் நலன்புரியின் நோக்கில் மதிப்பிடப்பட்ட ரூபா 800,000 கிரயமான மலசல கூடங்களைப் பழுதுபார்த்தல்.

(iv) நோயுற்ற மக்களுக்கு வசதிகளை வழங்கும் நோக்கில் மதிப்பிடப்பட்ட கிரயங்கள் முறையே ரூபா 1,400,000 மற்றும் ரூபா 3,000,000 தொகையான பஞ்சகர்ம கட்டிடத்தின் 3 ஆவது மாடியை திருத்துதலும் பிரதான மல அகற்றல் முறையை பழுதுபார்த்தலும்.

(v) மதிப்பிடப்பட்ட கிரயம் முறையே ரூபா 1,900,000 , ரூபா 625,000 மற்றும் 625,000 தொகையான கேட்போர்கூட நிர்மாணம், சிற்றுண்டிச் சாலையினதும் மலசலகூடத்தினதும் முறையை நிர்மாணித்தல் மற்றும் முதலாவது மாடியில் திறக்கப்படக்கூடிய கதவிற்காக கிறீல் வேலியொன்று நிர்மாணித்தல்.

(vi) மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,934,400 தொகையான கட்டிடம் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(vii) மதிப்பிடப்பட்ட கிரயம் முறையே ரூபா 2,000,000 மற்றும் ரூபா 1,135,000 தொகையான பட்டிபொல மூலிகைத் தோட்டத்தின் களஞ்சியத்தை பழுதுபார்த்தலும் அபிவிருத்தி செய்தலும் மற்றும் விடுதியின் மலசல கூடத்தை பழுதுபார்த்தல்.

(ஆ) பொரளை வைத்தியசாலையின் உற்பத்திக் கூடத்தின் தைலம் பிரிவிலும் இரசாயனப் பிரிவிலும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) பொரளை வைத்தியாலைக்கு வருடாந்தம் தேவைப்படுகின்ற மருந்து உற்பத்திக்காக உற்பத்தித் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்காக 36 தைல வகைகள் உற்பத்தி செய்யும் தேவை இனங்காணப்பட்டிருந்த போதிலும் 24 தைல வகைகள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

(iii) 2015 ஆம் ஆண்டிற்கு தேவையான அளவு இனங்காணப்படாமல் 13 வகை தைலங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

(iv) வருடாந்த தேவையினை இனங்காணாது 04 வகையான தைலங்கள் வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(v) வருடாந்த தேவையினைவிடக் குறைவாக இரசாயனப் பிரிவின் மூலம் 08 மருந்து வகைகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

(vi) புத்தராஜ கல்க மற்றும் ரஜ மேம்படுத்தல் வட்டி மருந்துகளின் வருடாந்த தேவைகள் முறையே 183 கிலோகிராம் மற்றும் 27

கிலோகிராம் ஆக இருந்த போதிலும், அபின் மற்றும் கசப்பான அபின் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அந்த மருந்து வகைகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சுச் செயலாளரின் 2015 யூன் 16 ஆந் திகதிய SH/PSD/SU/June/626/2 ஆம் இலக்க கடிதத்தில் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம், இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தினால் அரசசார்பற்ற அமைப்பிற்கு வழங்கப்பட்ட மருந்துகளுக்காக அக்கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 731,700 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.11 நட்டமும் இழப்பும்

திணைக்களத்தின் லொறிவண்டி 2014 யூன் 03 ஆந் திகதி முதல் யூன் 27 ஆந் திகதி வரை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக அறவிடப்பட வேண்டிய வாடகையான ரூபா 102,261 தொகை கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 17 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.12 அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை நடைமுறைகளைப் பின்பற்றாமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு.

(அ) ஒப்பந்தப் பெறுமதி ரூபா 6,346,173 தொகையான பட்டிபொல மூலிகைத் தோட்டத்தின் சமயலறை நிர்மாணத்தின் இரண்டாம் கட்டத்திற்குரிய ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு முரணானதாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு திணைக்களத்தின் தலைவரால் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஆரம்ப மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் பின்னர் கேள்வி கோரலுக்காக அதிகளவான காலம் எடுக்கின்றமையால், உசிதமானதும் ஏனைய விடயங்களையும் கவனத்தில் கொண்டு மொத்தக் கிரய மதிப்பீடு நாளது வரையாக்கப்பட்டு உரிய அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்தது. அதற்கு முரணானதாக ஊவா மாகாணத்தின் விலை வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ரூபா 5,126,963 தொகையான ஆரம்ப மதிப்பீடு மேல்மாகாண விலை வீதத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 6,363,462 தொகை வரை திருத்தம் செய்யப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட மதிப்பீடு ஆரம்ப மதிப்பீட்டை விட ரூபா 1,235,499 இனால் அதிகரித்திருந்த போதிலும், ஊவா மாகாணத்தின் விலை வீதத்திலிருந்து விலகியமைக்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி கோரலின் ஆகக்குறைந்த கால எல்லை 14 நாட்களாக இருக்க வேண்டிய போதிலும், அதற்காக 10 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(iv) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.14.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தக்காலம் 180 நாட்களினால் நீடிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தகாரரின் கட்டுப்பாட்டிலிருந்து விலகும் சந்தர்ப்பம் ஏற்பட்டமையின் காரணமாக தாமதம் எவ்வாறு ஏற்பட்டிருந்தது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,113,158,908 தொகையான பொரளை ஆயுர்வேத வைத்தியசாலை நிர்மாணத்தின் இரண்டாம் கட்டத்திற்குரிய ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) அமைச்சரவை பெறுகைகள் குழுவினால் தெரிவு செய்யப்பட்டிருந்த ஆகக்குறைந்த கேள்விதாரருக்கு 2008 நவம்பர் 24 ஆந் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 727,554,842 ஆக இருந்தது. இருந்த போதிலும், அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தகாரருடன் எழுத்துமூல உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்தகாரரின் கோரிக்கையின் பிரகாரம் ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதியில் 53 சதவீதத்திற்குச் சமமான ரூபா 385,604,066 தொகை சேர்த்து மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,113,158,908 இற்கு ஆரம்ப ஒப்பந்தகாரருக்கே ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு 2014 திசெம்பர் 04 ஆந் திகதி அமைச்சரவை பெறுகைகள் குழு தீர்மானித்திருந்தது. இருந்த போதிலும் அதற்கு முன்னர் 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 02/2012 அம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் அமைச்சரவை பெறுகைகள் குழு அங்கத்தவர்களின் 06 பேரில் 03 பேர் மாத்திரம் அத்தீர்மானத்திற்கான அங்கீகாரத்தை வழங்கியிருந்தனர்.

(iii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.7.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு முன்னர் ஒப்பந்தத்தின் செலவினங்களை வழங்குவதற்காக நிதிஏற்பாடு இருக்கின்றமைக்கு பெறுகைகள் நிறுவனத்தினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. இருந்த போதிலும், திணைக்களம் போதியளவான நிதிஏற்பாட்டை ஒதுக்காமல் பொரளை ஆயுர்வேத வைத்தியாலை நிமாணத்தின் இரண்டாம் கட்டத்திற்குரிய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2015 ஒக்தோபர் மாதம் வரையில் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டியிருந்த தாமதக் கட்டணம் ரூபா 11,895,234 ஆக இருந்தது.

(இ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்து ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,400,736 தொகையான பின்னதுவ மூலிகைத் தோட்டத்தைச் சுற்றி பாதுகாப்புச் சுவர் மற்றும் வேலி நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பொறியியலாளரினால் வேலை பூர்த்தி செய்தல் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.13.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் உரிய அதிகாரத்தைப் பெற்ற தரப்பினரின் அங்கீகாரமின்றி மேலதிக வேலைகளுக்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட விலையின் 24 சதவீதமான ரூபா 349,500 தொகை ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டு ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2,644,623 தொகையான கன்னெலிய மூலிகைத் தோட்டத்தின் எல்லை வேலி நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பொறியியலாளரினால் வேலை பூர்த்தி செய்தல் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.13.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம், உரிய அதிகாரத்தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரமின்றி மேலதிக வேலைக்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட விலையின் 24 சதவீதமான ரூபா 211,162 தொகை ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டு ஒப்பந்தப் பெறுமதி ரூபா 6,062,730 தொகையான கன்னெலிய மூலிகைத் தோட்டத்தில் சுற்றுலா விடுதியின் சமயலறையை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.13.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் உரிய அதிகாரம் பெற்ற தரப்பினரின் அங்கீகாரமின்றி மேலதிக வேலைகளுக்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட விலையின் 21 சதவீதமான அதாவது ரூபா 1,295,342 தொகை ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 90 நாட்களுக்குள் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் தாமதமாகும் ஒரு நாளைக்கு ரூபா 3,031.37 வீதம் தாமதக் கட்டணம்

அறவிடவேண்டியிருந்தது. உண்மையான தாமதக் காலம் 105 நாட்களாக இருந்த போதிலும் 33 நாட்களுக்கு மாத்திரம் ரூபா 100,035 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் மிகுதி 72 நாட்களுக்கான ரூபா 218,259 தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தேவையான மாதிரிகளுடன் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்குதல் தொடர்பாக 03 வருட சேவை அனுபவத்தைக் கொண்டிராத வழங்குனருக்கு அம்பாந்தோட்டை சமல் ராஜபக்ஸ ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 2015 ஆம் ஆண்டிற்காக பச்சை, உலர் உணவுகள் வழங்குவதற்குரிய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(எ) கம்பஹா விக்ரமாரச்சி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 2015 ஆம் ஆண்டிற்காக பச்சை, உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் ஒப்பந்தத்திற்காக இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரர் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கும் போது மூன்றாவது குறைந்த விலை சமர்ப்பித்திருந்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமையால் ரூபா 1,160,503 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஏ) பொரளை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு பாதுகாப்பு சேவை வழங்கும் பாதுகாப்புக் கம்பனியுடன் 2015 சனவரி 24 ஆந் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற சகல ஊழியர்களினதும் வயது 18 வருடங்களுக்கு மேற்பட்டும் 65 வயதிற்கு குறைவாகவும் இருக்க வேண்டிய போதிலும் 65 வயதினை விஞ்சிய 04 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் பாதுகாப்பு கம்பனியால் பாதுகாப்பு உத்தியோகத்தரின் வருகை மற்றும் வெளிச் செல்கைகளைப் பதிவதற்கான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பாதுகாப்பு உத்தியோகத்தரின் பெயர், கையொப்பம் மற்றும் நிழற்படம் என்பவற்றை உள்ளடக்கிய அடையாள அட்டை வழங்கப்பட்டிருக்கவில்லை. சிற்றூழியர் சேவை நிர்வாகப் பிரிவில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வரவுப் பதிவேட்டின் பிரகாரம் 2015 நவம்பர் 09 ஆந் திகதி தலைமை பாதுகாப்பு அதிகாரியை உள்ளடக்கிய 23 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கையொப்பம் இட்டிருந்த போதிலும், அன்றைய தினம் தலைமை பாதுகாப்பு அதிகாரியுடன் பொரளை வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 19 பேர் மாத்திரம் என உறுதிப்படுத்தப்பட்டது. 2015 ஆகஸ்ட் மாதத்திற்குரிய வரவுப் பதிவேடுகளில் 09 நாட்களில் சில பாதுகாவல் சேவை தடவைகளில் உத்தியோகத்தர்கள் கையொப்பம் இடாதிருந்த போதும், ஆகஸ்ட் மாதத்தின் 31 நாட்களும் சகல உத்தியோகத்தர்களும் வருகை தந்ததாகக் கருதி ரூபா 640,078 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.13 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் திணைக்களத்தால் சீர்செய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2014 | 5.10 | 2012 யூலை 13 ஆந் திகதி திணைக்களத்திலிருந்து வென்னப்புவ பிரதேச சபைக்கு பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற வைத்தியருக்கு அன்று முதல் 15 மாதங்களுக்காக ரூபா 548,376 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 200,000 மீள அறவிடப்பட்டிருந்த போதும் எஞ்சிய ரூபா 348,376 தொகை மற்றும் அரசாங்கக் கட்டணம் ரூபா 137,094 என்பவற்றை உள்ளடக்கிய மொத்தத் தொகையான ரூபா 485,470 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 3.14 முகாமைத்துவ நலிவுகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் உலர் மருந்துக் களஞ்சியத்தில் வெள்ளைச் சந்தனம் கிலோகிராம் 1,187.97 காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது ஒட்டுமொத்த நுகர்வு கிலோகிராம் 190 ஆகக் காணப்பட்டது. வருடாந்தம் சிறிய அளவில் நுகர்வு செய்யப்படுகின்ற வெள்ளை சந்தனத்தின் எஞ்சிய இருப்பு பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.15 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 395 | 359 | 36 |
| (ii) | மூன்றாம் நிலை | 42 | 13 | 29 |
| (iii) | இரண்டாம் நிலை | 163 | 106 | 57 |
| (iv) | ஆரம்ப நிலை | 327 | 272 | 55 |
| | மொத்தம் | 927 | 750 | 177 |